DEPOSITION OF WITNESS.
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO. 2, SIVAKASI
Case No. STC. 262/2023
**Depositions of PW-3 Witness for**

| | | | |
|---|---|---|---|
| Name | சித்ரா | Caste | |
| Father's name | | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 18th Day of February 2025

Signature of Witness.

**18.02.2025**

1 முதல் 5 எதிரிகள் ஆஜர். இல்லை. எதிரிகள் சார்பில் கு.வி.மு.ச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)

**முதல் விசாரணை**

நான் தற்போது ரெங்கபாளையத்தில் குடியிருந்து வருகிறேன். பலசரக்கு கடை வைத்து தொழில் செய்கிறோம். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதல் கையெழுத்து என்னுடையதுதான். கடந்த 07.04.2023 ம் தேதி மதியம் சுமார் 12.00 மணியளவில் போலீசார் வந்து சண்டை நடப்பதாக சொல்லி சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் வரைபடம் தயார் செய்தார்கள். தயார் செய்த பார்வை மகசரில் நானும், எனது கணவர் பரமகுரு என்பவரும் கையெழுத்து செய்தோம். **பார்வை மகசர் அ.சா. ஆ. 2 ஆகும்.** இது சம்பந்தமாக போலீஸ் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

புகார் கொடுத்த நபர் உங்களது உறவினர் என்றால் சரிதான். படம் வரைந்த

தாளில் தான் கையெழுத்து செய்தேன் என்றால் சரிதான். படம் வரைந்த சமயத்தில் எனது கணவரும் நானும் ஒன்றாகத்தான் இருந்தோம் என்றால் சரிதான். படம் வரைந்த அன்று காவல் நிலையத்திற்கு போலீசார் அழைத்தார்களா என்றால் அழைத்தார்கள். நிலையத்தில் கையெழுத்து வாங்கினார்களா என்றால் இல்லை. சம்பவ இடத்திற்கும் எனது கடைக்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் சிறிது தூரம் தான் இருக்கும்.